# மாலைக்கதிர்
Maalaikkathir

சாயல் - 03 வள்ளுவர் ஆண்டு 2054 மாசி 26 செவ்வாய்க்கிழமை 11.03.2025 கதிர் 150







# அனைத்து சபைகளிலும் தமிழரசே ஆட்சிப்பீடம் ஏறும்!

## யாழில் கட்டுப்பணத்தைச் செலுத்திய பின்னர் சுமந்திரன் இப்படி நம்பிக்கையுடன் தெரிவிப்பு




யாழ்ப்பாணம், மார்ச் 11

"யாழ்ப்பாணம் மாவட்டத்தில் உள்ள அனைத்து உள்ளூராட்சி சபைகளிலும் இலங்கைத் தமிழரசுக் கட்சி இம்முறை ஆட்சி அமைக்கும் என்ற உறுதியான நம்பிக்கை எமக்கு இருக்கின்றது." - என்று அந்தக் கட்சியின் ஊடகப் பேச்சாளரும் பதில் பொதுச்செயலாளருமான ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

உள்ளூராட்சி சபைத் தேர்தலில் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் அனைத்து சபைகளிலும் 2➤

# இலங்கைத் தமிழரசுக் கட்சியில் அதிரடியாக இணைந்த விந்தன்



**யாழ்ப்பாணம், மார்ச் 11**

**ரெலோ கட்சியின் முக்கியஸ்தரும் முன்னாள் வடக்கு மாகாண சபை உறுப்பினருமான விந்தன் கனகரட்ணம், இலங்கைத் தமிழரசுக் கட்சியில் இணைந்துகொண்டுள்ளார்.**

**ரெலோ கட்சியின் முக்கிய உறுப்பினர்களில் ஒருவராக இருந்து முன்னாள் யாழ்ப்பாணம் மாநகர சபை மற்றும் வடக்கு மாகாண சபை உறுப்பினராக இருந்த விந்தன் கனகரட்ணத்துக்கும் கட்சிக்கும் இடையில் அண்மைக்காலமாக முரண்பாடுகள் ஏற்பட்டு வந்திருந்தன.**

**இந்நிலையில், திடீரென நேற்று அவரும், அவரது மகனும் தமிழரசுக் கட்சியின் பதில் தலைவர் சி.வி.கே. சிவஞானம் முன்னிலையில் தமிழரசுக் கட்சியில் இணைந்து உறுப்புரிமைகளையும் பெற்றுக்கெண்டனர்.**

**ரெலோவின் ஆயுதப் போராட்டம் முதல் அரசியல் பயணம் வரை நீண்டகால உறுப்பினர் மட்டுமல்லாது அந்தக் கட்சியின் முக்கியஸ்தராகவும் விளங்கி வந்த விந்தன் கனகரட்ணம் திடீரென அந்தக் கட்சியில் இருந்து வெளியேறி தமிழரசுக் கட்சியில் தன்னை இணைத்துக் கொண்டமை தமிழ்க் கட்சிகளிடத்தே பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.**

## வேலையில்லாப் பட்டதாரிகளுக்கு நியாயத்தை பெற்றுக்கொடுங்கள்

### சபையில் அரசிடம் சஜித் வேண்டுகோள்



கொழும்பு, மார்ச் 11

நாட்டில் வேலையில்லாப் பட்டதாரிகளுக்கு இப்போதாவது நியாயத்தைப் பெற்றுக் கொடுங்கள் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, அநுர அரசிடம் வலியுறுத்தினார்.

நிலையியற் கட்டளை 27(2) இன் கீழ் இன்று நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சித் தலைவர் கேள்வி எழுப்பி உரையாற்றும்போதே 2➤

## தென்னக்கோனைக் கைது செய்ய நீதிமன்றால் பகிரங்கப் பிடியாணை



கொழும்பு, மார்ச் 11

முன்னாள் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோனைக் கைது செய்யுமாறு மாத்தறை நீதிவான் நீதிமன்றத்தால் பகிரங்கப் பிடியாணை பிறப்பிக்கப் பட்டுள்ளது.

இந்த உத்தரவு இன்று செவ்வாய்க்கிழமை பிறப்பிக்கப் பட்டுள்ளது.

அத்துடன், தேசபந்து தென்னக்கோனுக்கு எதிராக வெளிநாட்டுப் பயணத் 2➤

## பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்கக் கோரி கையெழுத்து வேட்டை





யாழ்ப்பாணம், மார்ச் 11

பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்கக் கோரி யாழ்ப்பாணத்தில் இன்று கையெழுத் துப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

மக்கள் பேரவைக்கான இயக்கத்தின் ஏற்பாட்டில் யாழ். மத்திய பஸ் நிலையம் முன்பாக இன்று காலை இந்தப் போராட்டம் நடைபெற்றது. 2➤

# அனுராதபுரம் போதனா வைத்தியசாலை பெண் வைத்தியர் பாலியல் வன்புணர்வு

## வைத்தியர்கள் இன்று பணிப்புறக்கணிப்புப் போராட்டம்




அனுராதபுரம், மார்ச் 11

அனுராதபுரம் போதனா வைத்தியசாலையின் பெண் வைத்தியரைக் கத்திமுனையில் அடையாளம் தெரியாத நபர் ஒருவர் பாலியல் வன்கொடுமை செய்தார் எனக் கூறப்படும் சம்பவத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து அந்த வைத்தியசாலையின் வைத்தியர்கள் இன்று பணிப்புறக்கணிப்புப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபரை உடனடியாகக் கைது செய்ய வேண்டும் என்று போராட்டத்தில் ஈடுபட்டுள்ள வைத்தியர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

பாதிக்கப்பட்ட 32 வயது பெண் வைத்தியர் நேற்று மாலை தனது கடமைகளை முடித்துவிட்டு, அரசால் வைத்தியர்களுக்காக வழங்கப்பட்ட அவரின் தங்குமிடத்துக்குச் சென்றுள்ளார்.

பின்னர் மாலை 6:30 மணி முதல் 7 மணி வரையான காலப்பகுதியில் அடையாளம் தெரியாத ஒருவர் அவரின் தங்குமிடத்துக்குச் சென்று, கத்தியைக் காட்டி மிரட்டி, பாலியல் வன்கொடுமை செய்தார் என்று கூறப்படுகின்றது.

இந்தச் சம்பவம் தொடர்பில் அனுராதபுரம் பொலிஸார் தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

### அனைத்து சபைகளிலும் ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

போட்டியிடுவதற்கான கட்டுப்பணத்தை யாழ். தேர்தல் திணைக்களத்தில் இன்று இலங்கைத் தமிழரசுக் கட்சி செலுத்தியது. இந்தக் கட்டுப்பணத்தைக் கட்சியின் பதில் பொதுச்செயலாளர் எம்.ஏ.சுமந்திரன் செலுத்தினார். அதன்பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"யாழ்ப்பாணத்தில் உள்ள உள்ளூராட்சி சபைகளுக்கான வேட்புமனுத் தாக்கலைச் செய்வதற்கான கட்டுப்பணத்தை இலங்கைத் தமிழரசுக் கட்சி இன்று செலுத்தியுள்ளது.

இந்த மாவட்டத்தில் உள்ள 17 சபைகளிலும் போட்டியிடுவதற்குக் கட்டுப்பணத்தைச் செலுத்தியதுடன் வேட்புமனுப் படிவங்களையும் பெற்றுக்கொண்டுள்ளோம்.

யாழ். மாவட்டத்தில் உள்ள 17 சபைகளிலும் இலங்கைத் தமிழரசுக் கட்சி இந்த முறை நிர்வாகத்தை அமைக்கும் என்ற உறுதியான நம்பிக்கையுடன் இந்தத் தேர்தலில் நாங்கள் போட்டியிடுகின்றோம்.

இந்தத் தடவை தேர்தலின்போது மேயர், நகர பிதா மற்றும் தவிசாளர் யார் என அறிவிப்பதில்லை என்று தமிழரசுக் கட்சியின் மத்திய செயற்குழு தீர்மானித்துள்ளது. ஆகையினால் தேர்தலுக்குப் பின்னர்தான் அது யார் என்பது தொடர்பில் தீர்மானிக்கப்படும். அநேகமாகப் புதியவர்கள் பலர் இம்முறை கட்டாயம் நியமிக்கப்படுவார்கள்.

தமிழரசுக் கட்சிக்கு அதிகமான வேட்பாளர்கள் இருக்கின்றார்கள். அவ்வாறு அதிகமானவர்கள் இருப்பதால் யாரை நிறுத்துவது என்பதில் இழுபறி நிலை இருக்கின்றது.

அது வழமையாக எங்களுக்கு இருக்கின்ற ஒரு பிரச்சினைதான். முதன்மையாக இருக்கின்ற கட்சிகளில் போட்டியிடுவதற்குப் பலர் ஆர்வம் காட்டுவார்கள். இதனால் எமக்கு இழுபறி வந்தாலும் அதனை நாங்கள் சுமுகமாகத் தீர்த்துக்கொண்டு யார், யார் வேட்பாளர்கள் என்பதைத் தீர்மானிப்போம்." - என்றார்.

### வேலையில்லாப் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் உரையாற்றுகையில்,

"வேலையில்லாப் பிரச்சினைக்கும், கல்வி முறைக்கும் இடையே நிலவும் பொருத்தமற்ற சுழற்சி இன்னும் தீர்க்கப்படாத பிரச்சினையாகவே அமைந்து காணப்படுகின்றன. அரசியலில் கைக்கூலிகளாக மட்டுமே இருக்கும் வேலையில்லாப் பட்டதாரிகளின் பிரச்சினை மீண்டும் பிரதான பேசு பொருளாக மாறியுள்ள பின்னணியில், நான் பின்வரும் கேள்விகளைக் கேட்கின்றேன். சரியான பதில்களையும் விளக்கங்களையும் அரசிடம் இருந்து எதிர்பார்க்கின்றேன்.

01. இலவசக் கல்வியின் கீழ் ஆரம்ப, இடைநிலை மற்றும் உயர் நிலை என ஒவ்வொரு நிலைக்கும், ஒரு மாணவருக்கு அரசு ஆண்டுக்கு எவ்வளவு தொகையைச் செலவழிக்கின்றது? இது தொடர்பாக அரசு அங்கீகரிக்கப்பட்ட ஆய்வேதையும் மேற்கொண்டுள்ளதா?

02. உயர் தரத்தில் கலை, வணிகம், விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பம் ஆகிய பாடங்களில் பயிலும் மாணவர்கள், தங்கள் பட்டப்படிப்பு முடிவடையும் திகதியிலிருந்து வேலை கிட்டும் வரை எடுக்கும் காலம் தொடர்பில் அரசு முன்னெடுத்த ஏதேனும் ஆய்வுகள் உண்டா? அவ்வாறானால், எடுக்கும் காலத்தை தனித் தனியாக குறிப்பிடவும்?

மேலும், இதுவரை 580 சுதேச மருத்துவ பட்டதாரிகள் தங்கள் பட்டப்படிப்பை நிறைவு செய்துள்ளனர். இவர்களுக்குத் தொழில் பயிற்சி வழங்க அரசு இதுவரையில் நடவடிக்கை எடுக்கவில்லை. இவர்களுக்குரிய தொழில் பயிற்சிகளை வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

03. வேலையற்ற பட்டதாரிகள் எத்தனை பேர் உள்ளனர்? இந்தப் பட்டதாரிகளில் வெளிவாரி, உள்வாரி, திறந்த மற்றும் தனியார் பல்கலைக்கழக பட்டதாரிகள் எத்தனை பேர் உள்ளனர்? பட்டதாரிகளின் எண்ணிக்கையை அவர்கள் பெற்ற பட்டப்படிப்புக்கு ஏற்ப தனித்தனியாக முன்வைக்க முடியுமா? தொழில் சந்தையில் நுழைய முடியாமல் எந்த அடிப்படையில் அவர்கள் வேலையில்லாமல் இருக்கிறார்கள்? இது குறித்து அரசாங்கம் மேற்கொண்ட ஆய்வுகள் என்ன? அவற்றை சபையில் முன்வைப்பீரா?

04. தேசிய மக்கள் சக்தியின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் 72 ஆவது பக்கத்தில் வேலையில்லா பட்டதாரிகள் 35 ஆயிரம் பேருக்கு முறையான ஒழுங்கின் கீழ் துரிதமாக வேலை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதன் பிரகாரம், எத்தனை பட்டதாரிகளை இந்த ஆண்டு சேர்த்துக்கொள்ள எதிர்பார்க்கப்படுகின்றது? இவை எந்தெந்த துறைகளுக்கு? இந்த ஆண்டு வரவு - செலவுத் திட்டத்தில் இதற்காக எவ்வளவு தொகை ஒதுக்கப்பட்டுள்ளது? வேலை தேவைப்பாட்டின் அடிப்படையில், அரசு அவர்களை ஏதாவது தகுதி அடிப்படையிலா இணைத்துக்கொள்ள எதிர்பார்க்கின்றது? இல்லையென்றால், ஏதேனும் போட்டிப் பரீட்சை மூலமாகவா?

05. கலைப் பட்டதாரிகளில் பெரும்பாலானோர் பட்டப்படிப்புக்குப் பிறகு வேலை தேடும் நெருக்கடியில் இருந்து வருவதால், இந்த நிலையை முடிவுக்கு கொண்டு வர இதுவரையில் அரசு முன்வைத்துள்ள கல்விச் சீர்திருத்த முன்மொழிவுகள் யாவை?

தற்போதைய அரசு வாக்குறுதியளித்தபடி, இந்தப் பட்டதாரிகளுக்கு 45 வயது வரம்பைப் பொருட்படுத்தாமல் போட்டிப் பரீட்சைகளில் தோற்றுவதற்கு அனுமதியளிக்க வேண்டும். இந்த வேலையில்லாப் பட்டதாரிகளைத் தொடர்பு கொண்டு, அவர்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வுகளை வழங்குங்கள்." - என்றார்.

வேலையில்லாப் பட்டதாரிகளின் பிரச்சினைகள் தொடர்பில் அரசிடம் எதிர்க்கட்சித் தலைவர் கேள்வி எழுப்பிய சந்தர்ப்பத்தில், இதற்கான பதிலை பின்னர் முன்வைப்பதாக ஆளுந்தரப்பினர் தெரிவித்தனர்.

"இதற்குப் பதில் வழங்க அரசு கால அவகாசம் கேட்பது நியாயமற்றது. ஜனாதிபதியால் முன்வைக்கப்பட்ட வரவு - செலவுத் திட்ட உரையில் இந்த 35 ஆயிரம் பேருக்குமான பதில்கள் இருக்க வேண்டும். இதற்குப் பதிலளிக்க அரசு கால அவகாசம் கேட்டதன் மூலம், இந்தப் பிரச்சினைக்கு பதில் அளிக்காமல் அரசு வேண்டுமென்றே புறக்கணிப்பதாகவே தோன்றுகின்றது." - என்று எதிர்க்கட்சித் தலைவர் இங்கு மேலும் தெரிவித்தார்.

### தென்னக்கோனைக் கைது ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தடையும் விதிக்கப்பட்டுள்ளது.

2023 ஆம் ஆண்டு மாத்தறை, வெலிகம பகுதியில் உள்ள ஹோட்டல் ஒன்றின் மீது துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்ட சம்பவம் தொடர்பில் முன்னாள் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோனைக் கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துமாறு மாத்தறை நீதிவான் நீதிமன்றத்தால் கடந்த பெப்ரவரி மாதம் 28 ஆம் திகதி பிடியாணை பிறப்பிக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில், தேசபந்து தென்னக்கோனைக் கைது செய்ய பொலிஸார் தீவிர நடவடிக்கை எடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

### பயங்கரவாதத் தடைச் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பயங்கரவாதத் தடைச் சட்டத்தை உட னடியாக நீக்க வேண்டும் எனக் கோரி மக்கள் பேரவைக்கான இயக்கத்தினர் நாடு முழுவதும் கையெழுத்துப் பெறுகின்ற போராட்டத்தை நடத்தி வருகின்றனர்.

இதன் தொடராக யாழ்ப்பாணத்திலும் கையெழுத்துப் பெறும் போராட்டத்தை இன்று மேற்படி இயக்கத்தினர் மேற்கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

செய்திகளையும் இன்னும் பல காணொளிகளையும் பார்வையிட
காலைக்கதிர் TV
காலைக்கதிர் TV YouTube தளம்



# உள்ளாட்சி தேர்தலில் அம்பாறையில் “மரம்” சின்னத்தில் தனித்துப் போட்டி

## அமைப்பாளர்களுடனான சந்திப்பில் ஹக்கீம் தெரிவிப்பு







அம்பாறை, மார்ச் 11

எதிர்வரும் உள்ளூராட்சி சபைத் தேர்தலில் அம்பாறை மாவட்டத்தில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் அதன் மரச் சின்னத்தில் தனித்துக் களம் இறங்கவுள்ளது என்று ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தேசிய தலைவரும் கண்டி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

அம்பாறை மாவட்டத்தில் உள்ள ஒலுவில் தனியார் விடுதியில் (கிறீன் விலா) நேற்று மாலை நடைபெற்ற கட்சியின் அமைப்பாளர்களுடனான சந்திப்பின்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் அங்கு தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்,

“கடந்த காலங்களைப் போல் அல்லாது இம்முறை நடைபெறவுள்ள தேர்தலில் அம்பாறை மாவட்டத்தில் உள்ள அதிகப்படியான ஆசனங்களைக் கைப்பற்றி அதிகார சபைகளை எமது ஆளுகைக்கு உட்படுத்துவது அமைப்பாளர்களின் கரங்களிலேயே தங்கியுள்ளது. இதற்காக எமது மகளிர் அணி, இளைஞர் அணி என்பவற்றை உற்சாகப்படுத்தி பட்டியல் வேட்பாளர்களாக களம் இறக்க அத்தனை அமைப்பாளர்களும் ஒன்றுபட வேண்டும்.” - என்றார்.

இந்த நிகழ்வில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் பொதுச்செயலாளர் நாயகமும் நாடாளுமன்ற உறுப்பினருமான நிசாம் காரியப்பர், கட்சியின் பிரதி தேசிய அமைப்பாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான எம். எஸ். உதுமாலெப்பை, முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எம் .ஐ .எம். மன்சூர் மற்றும் கட்சியின் பிரதிச் செயலாளர் நாயகம் மன்சூர் ஏ. காதர் உள்ளிட்ட குழுவினர் கலந்துகொண்டனர்.

# பட்டலந்த ஆணைக்குழு அறிக்கை இந்த வாரத்துக்குள் நாடாளுமன்றில்

## அமைச்சரவைப் பேச்சாளர் தகவல்



கொழும்பு, மார்ச் 11

பட்டலந்த விசாரணை ஆணைக்குழுவின் அறிக்கையை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்க அமைச்சரவைக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய மேற்படி அறிக்கை இந்த வாரத்துக்குள் நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்படும் என்று அமைச்சரவைப் பேச்சாளர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் இன்று நடைபெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த ஊடகவியலாளர் மாநாட்டின்போதே அவர் இந்தத் தகவலை வெளியிட்டார்.

# பாழடைந்த கிணற்றில் இருந்து மூன்று கைத்துப்பாக்கிகள் மீட்பு

பாழடைந்த கிணற்றில் இருந்து இரண்டு வெளிநாட்டுத் துப்பாக்கிகள் உள்ளடங்களாக மூன்று கைத்துப்பாக்கிகள் இன்று செவ்வாய்க்கிழமை பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளன.

கடுவலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வெலிவிட்ட பகுதியில் பொலிஸார் முன்னெடுத்திருந்த விசேட சோதனை நடவடிக்கையின்போதே இந்தக் கைத்துப்பாக்கிகள் மீட்கப்பட்டுள்ளன.

தனியார் நிறுவனம் ஒன்றுக்குச் சொந்தமான இடம் ஒன்றில் உள்ள சுமார் 45 அடி ஆழமான கிணற்றில் மறைத்து வைக்கப்பட்டிருந்த பொலித்தீன் பை ஒன்றைப் பொலிஸார் மீட்டுள்ளனர்.

இதன்போது அந்தப் பையினுள் இருந்து வெளிநாட்டில் தயாரிக்கப்பட்ட இரண்டு கைத்துப்பாக்கிகள், ரிவோல்வர் வகை கைத்-துப்பாகி ஒன்று, அந்தத் துப்பாக்கிகளுக்கான 153 தோட்டாக்களும் பொலிஸாரால் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

துப்பாகிகள் பாதுகாப்பாகப் பல பொலித்தின் கைபகளினுள் இட்டே மறைத்து வைக்கப்பட்டிருந்தன என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் சந்தேகநபர்கள் எவரும் கைது செய்யப்படாத நிலையில், துப்பாக்கிகளை மறைத்து வைத்த சந்தேகநபர் தொடர்பில் கடுவலை பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

# கதிர்காமம் விகாராதிபதியை 7 மணி நேரம் துருவிய சி.ஐ.டி.



கொழும்பு, மார்ச் 11

கதிர்காமம் கிரிவெஹெர விகாராதிபதி கொபவக்க தம்மிந்த தேரர் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் ஆஜராகி வாக்குமூலம் வழங்கியுள்ளார்.

கதிர்காமத்தில் கட்டப்பட்டுள்ள வீடு ஒன்று முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்குச் சொந்தமானது எனக் கூறப்படும் சம்பவம் தொடர்பில் வாக்குமூலம் வழங்குவதற்காகக் கொபவக்க தம்மிந்த தேரர் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் இன்று செவ்வாய்க்கிழமை காலை ஆஜராகியிருந்தார்.

இதன்போது, குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகள் கதிர்காமம் கிரிவெஹெர விகாராதிபதி கொபவக்க தம்மிந்த தேரரிடம் இருந்து 7 மணிநேரம் வாக்குமூலம் பதிவு செய்துள்ளனர்.

வாக்குமூலம் வழங்கிய பின்னர் கதிர்காமம் கிரிவெஹெர விகாராதிபதி கொபவக்க தம்மிந்த தேரர் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் இருந்து வெளியேறியுள்ளார்.

மேலும், இந்தச் சம்பவம் தொடர்பில் வாக்குமூலம் வழங்குவதற்காக கதிர்காமம் ஆலயத்தின் பஸ்நாயக்க நிலமே திஷான் குணசேகர நேற்று திங்கட்கிழமை குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் ஆஜராகியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# பஸ் மிதிபலகையில் பயணித்த வயோதிபர் கீழே வீழ்ந்து உயிரிழப்பு

கொழும்பு, மார்ச் 11

பஸ் மிதிபலகையில் பயணித்த வயோதிபர் ஒருவர் கீழே தவறி வீழ்ந்து உயிரிழந்துள்ளார்.

இந்த விபத்து ருவன்வெல்ல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஹம்பஸ்வலான பகுதியில் நேற்று திங்கட்கிழமை பிற்பகல் இடம்பெற்றுள்ளது.

உயிரிழந்தவர் ஹம்பஸ்வலான, ருவன்வெல்ல பகுதியைச் சேர்ந்த 64 வயதுடைய வயோதிபர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

ருவன்வெல்லவில் இருந்து தன்னொருவ நோக்கிப் பயணித்த பஸ் ஒன்றின் முன் பக்கத்தில் உள்ள மிதிபலகையில் பயணித்த வயோதிபர் கீழே தவறி வீழ்ந்து படுகாயமடைந்தார்.

அவர் கரவனெல்ல வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

உயிரிழந்த வயோதிபர் சுகவீனம் காரணமாக பஸ் மிதிபலகையில் அமர்ந்திருந்த நிலையில் திடீரென கீழே தவறி வீழ்ந்துள்ளார் என்று பொலிஸாரின் விசாரணையில் தெரியவந்துள்ளது.

மேற்படி வயோதிபரின் சடலம் கரவனெல்ல வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

ருவன்வெல்ல பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்கு மூன்று புதிய நீதிபதிகள் நியமனம்







மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்கு மூன்று புதிய நீதிபதிகள் நியமிக்கப்பட்டுள்ளனர். அவர்கள் இன்று ஜனாதிபதி செயலகத்தில் ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க முன்னிலையில் பதவிப் பிரமாணம் செய்து கொண்டனர்.

அதன்படி, மேல் நீதிமன்ற நீதிபதிகளான அன்னலிங்கம் பிரேமசங்கர், டபிள்யூ.கே.எஸ்.யு. பிரேமசந்திர, கே. பிரியந்த பெர்னாண்டோ ஆகி யோர் மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்குப் புதிய நீதிபதிகளாக நியமிக்கப் பட்டுள்ளனர்.

இந்த நிகழ்வில் ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்கவும் கலந்து கொண்டார்.

# யானை தாக்கி மீனவர் மரணம்

மாத்தறை, மார்ச் 11

காட்டு யானை தாக்கி மீனவர் ஒருவர் உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்தச் சம்பவம் நேற்று திங்கட்கிழமை மாத்தறை, கிரிந்த, அதகலவெல்ல பகுதியில் இடம்பெற்றுள்ளது.

திஸ்ஸமஹாராமை பகுதியைச் சேர்ந்த 55 வயதுடைய மீன வரே உயிரிழந்துள்ளார். இவர் மீன்பிடித் தொழிலுக்காக மேலும் இரண்டு நபர்களுடன் இணைந்து கிரிந்த துறைமுகத்தை நோக்கிப் பயணித்துக்கொண் டிருந்தபோது வீதியில் இருந்த காட்டு யானை தாக்கி சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

மேற்படி நபரின் சடலம் பிரேத பரிசோதனைக்குப் பின்னர் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது என்று பொலிஸார் மேலும் குறிப்பிட்டனர்.

## சட்டவிரோத ஆயுதங்கள் மீட்பு:

# முன்னாள் மாகாண சபை உறுப்பினர் சஞ்சய கைது

கொழும்பு, மார்ச் 11

முன்னாள் மாகாண சபை உறுப்பினர் சஞ்சய சிறிவர்தன இன்று செவ்வாய்க்கிழமை பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

அத்தனகல்ல பகுதியில் உள்ள சஞ்சய சிறிவர்தனவுக்குச் சொந்தமான காணியில் ரி - 56 ரக துப்பாக்கி, 2 மகசின்கள், 130 தோட்டாக்களைப் பொலிஸார் இன்று கண்டெடுத்ததையடுத்தே அவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

அதனைத் தொடர்ந்து, அந்தப் பகுதியில் மறைத்துவைக்கப் பட்டுள்ள மேலும் சில துப்பாக்கிகளைக் கண்டுபிடிப்பதற்கான நடவடிக்கைகளில் பொலிஸார் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர்.

# விபத்தில் இருவர் பலி

கொழும்பு, மார்ச் 11

நாவுல - பக்கமூன வீதியில் மொரகஹகந்த பிரதேசத்தில் இடம்பெற்ற விபத்தில் இருவர் உயிரிழந்துள்ளனர் என்று நாவுல பொலிஸார் தெரிவித்தனர்.

கொன்கஹவெல பிரதேசத்தில் நடைபெற்ற இறுதிச் சடங்கு நிகழ்வொன்றில் கலந்துகொண்டு மீண்டும் வீடு நோக்கிப் பயணித்த சிறிய லொறி ஒன்று மற்றுமொரு லொறியின் பின்புறத்தில் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

நேற்று திங்கட்கிழமை இடம்பெற்ற விபத்தின் போது, சிறிய லொறியின் சாரதியும், அதில் பயணித்த குழந்தையும், இரண்டு ஆண்களும், பெண் ஒருவரும் படுகாயமடைந்த நிலையில் பக்கமூன வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் ஆண் ஒருவரும், பெண் ஒருவரும் உயிரிழந்துள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்தவர்கள் ஹிங்குரக்கொட பிரதேசத்தைச் சேர்ந்த 47 வயதுடைய ஆணும், 41 வயதுடைய பெண்ணும் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இதனையடுத்து லொறியின் சாரதி சந்தேகத்தின் பேரில் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை நாவுல பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.



இயற்கை எத்தனையோ விசித்திரமான முரண்களைத் தன்னுள் பொதிந்து வைத்திருக்கிறது. எந்தவொரு விஷயத்திலும் பல கோணங்கள் இருக்கின்றன. ஒருபுறம் சரியாகத் தோன்றும், ஒன்று மறுபக்கம் தவறாகத் தோற்றமளிக்கிறது. எந்தவொரு கருத்தையும் சரி தவறு என்று நம்மால் பகுக்க முடியாது.

உயிரினங்கள் இந்தப் பூமியில் தழைக்க இயற்கை இனப்பெருக்கம் என்ற ஒரு வழியை வைத்திருக்கிறது. ஆணும் பெண்ணும் கலவி செய்வதால் உயிர்கள் உருவாகின்றன. இது பொதுவான விதி. ஆனால் கலவி வெறும் குழந்தைப் பிறப்புக்குத் தான் என்பது பிற உயிர்களுக்கு மட்டுமே பொருந்தும். இனப்பெருக்கம் தவிர்த்து வெறும் உடல் இன்பத்திற்காகவும் மனித குலம் கலவி கொள்ளும் வகையில் தான் படைக்கப்பட்டிருக்கிறது.

ஆதிகாலம் தொட்டே உடல் ரீதியான உறவு என்றால் ஆணும் பெண்ணும் மட்டும்தான் ஈடுபட வேண்டும் என்று ஒரு பொதுக்கருத்து நிலவுகிறது. அதற்கு மாற்றாக இருக்கும் உறவுகளை இயற்கைக்கு முரணானது என்று சமூகம் ஒதுக்கி வைத்திருக்கிறது.

ஒருபால் அல்லது தன்பால் உறவு என்பது புராதன காலத்தில் இருந்தே இருக்கிறது. அரசர்களின் அந்தப்புரங்களில் அடைபட்டிருந்த ஆயிரக்கணக்கான பெண்கள் தங்களது பாலியல் தேவைகளை எவ்வாறு நிறைவேற்றியிருக்க முடியும்? அந்தப்புரத்தில் காவலுக்கு ஆண் காவலர்களை நியமிக்காமல் மூன்றாம் பாலினத்தவர்களை காவலுக்கும், வேலைக்கும் வைத்தார்கள். எனவே அந்தப் பெண்கள் தங்களுக்குள்ளேயே தான் நிச்சயம் உறவு வைத்திருக்க வேண்டும்.

தன்பால் உறவென்பது இயற்கையான உணர்ச்சியின் ஒரு பகுதியே. இதில் ஈடுபடுவது அவரவர் ஹோர்மோன்களின் செயற்பாட்டினால் தான். இதை விமர்சிக்க யாருக்கும் உரிமை இல்லை. ஆண், பெண் உறவில் இருப்போர் இதைத் தவறென்று சொன்னால் தன்பால்



உறவினர் அவர்களை விமர்சிக்கலாம் தானே? இத்தகைய உறவு இயற்கையின் விதிகளுக்கு அப்பாற்பட்டது என்ற முட்டாள்தனமான கருத்து கிட்டத்தட்ட மூன்று நூற்றாண்டுகளுக்கு முன்பிருந்து தான் ஏற்பட்டது. அதற்கு முன்பு இது சட்ட விரோதம் என்று யாரும் சொன்னதில்லை.

பழங்கால கிரேக்கத்தில், சாக்ரடீஸ் மற்றும் பிளாட்டோ உள்ளிட்ட தத்துவஞானிகள் கூட இளம் சிறார்களுடன் பாலியல் உறவு கொண்டிருந்தனர். அங்கே அது இயல்பானதாக ஏற்கப்பட்டிருந்தது. நமது புராணங்களில் கூட இத்தகைய உறவுகள் சுட்டப்பட்டுள்ளன. தன்பால் உறவில் இருக்கும் சிலர் எதிர்பால் உறவிலும் ஈடுபடுவர். அவர்களுக்கும் குழந்தைகள் பிறக்கும். ஆனால் அவையும் அவர்கள்போல பாலியல் செயல்பாட்டில் ஈடுபடும் என்று உறுதியாகச் சொல்ல முடியாது.

வளரும்போது எங்கோ எப்போதோ ஓர் இடத்தில் ஹோர்மோன்கள் மாற்றமடைகின்றன. இதை அறிவியல் ரீதியாகத்தான் அணுக வேண்டும்.

தன்பால் உறவில் ஈடுபடும் ஆண்கள் 'கே' என்றும் பெண்கள் 'லெஸ்பியன்'



# ஆண்பால் ! பெண்பால் !! தன்பால் !!!

என்றும் பொதுமைப்படுத்தப் படுகிறார்கள். சிறைக்கூடங்களிலும், இராணுவத்திலும் இருப்பவர்கள் தங்கள் உடல் தேவையைத் தீர்த்துக் கொள்ள தன்பால் சேர்க்கையில் ஈடுபடுகிறார்கள் என்பதை மறுக்க முடியாது. அதேநேரம் இதைச் சுயஇன்பம் போல ஒரு சாதாரணப் பழக்கமாகவும் எடுத்துக் கொள்ள வேண்டும்.

ஒருபால் உறவு இயற்கைக்கு மாறானது என்று இந்தியச் சட்டப்பிரிவு 377 கூறுகிறது. பிரிட்டிஷ் ஆட்சி காலத்தில் கொண்டு வரப்பட்ட இந்தச் சட்டம் கூட நமது பண்பாடு, கலாசாரம் போன்ற மாயச் சங்கிலிகளால் கட்டமைக்கப்பட்டதாகத்தான் இருக்கிறது. 1970 களில் நடைபெற்ற அறிவியல் ஆராய்ச்சிகளின் விளைவாக விலங்குகளிலும் இதுபோல தன்பாலுறவு உள்ளவைகளைக் கண்டுபிடித்தார்கள். அதன் பின்னரே தன்பால் உறவு என்பது மன நோய், மனப் பிறழ்வு அல்ல என்பதை உணர்ந்தார்கள்.

நத்தை, மண்புழு, அட்டை போன்ற உயிரினங்களில் தனித்தனியே ஆண், பெண் என்ற பாலினம் கிடையாது. அவைகளே தேவைக்கு தகுந்தபடி ஆணும், பெண்ணுமாக இயங்குகின்றன. அப்போது இவற்றை என்ன சொல்வது?

அறிவியலாளர்கள் உணர்ந்து கொண்டார்களே தவிர பொதுமக்களின் கண்ணோட்டம் மாறவில்லை. இதில், படித்தவர், படிக்காதவர் என்ற எவ்வித வித்தியாசமும் இல்லாமல் அனைவராலும் ஒருபால் உறவு மனநோய் என்று கணிக்கப்படுகிறது. இது அநாகரிகமானதாகவும் அவமானத்துக்கு உரியதாகவும், ஆட்சேபகரமாகவும் பார்க்கப்படுகிறது. இதில் இருக்கிறோம் என்று வெளியே சொன்னாலே கேவலமான பார்வையைத் தான் எதிர்கொள்ள வேண்டியிருக்கிறது.

இத்தகைய உறவில் மாபெரும் அறிஞர்கள் கூட இருந்திருக்கின்றனர். மாவீரன் அலெக்ஸாண்டர், ஆஸ்கார் வைல்ட், கணித மேதையும், கணினி அறிவியலின் தந்தையுமான ஆலன் டூரிங், புகழ் பெற்ற ஓவியர் மைக்கேல் ஏஞ்சலோ, டாவின்சி, ஜூலியஸ் சீசர், கவிஞர் பைரன் போன்றவர்களும் தன்பால் ஈர்ப்பாளர்களே. இன்னும் பெயர் தெரியாத எண்ணற்ற ஓரினச்சேர்க்கையாளர்கள் இருந்து கொண்டுதான் இருக்கிறார்கள்.

ஆப்கானிஸ்தானைக் கைப்பற்றிய தாலிபான் தீவிரவாதிகள் ஒருபால் உறவு குற்றம் என்றும் அதில் ஈடுபடுவோர் மரண தண்டனைக்கு உள்ளாக்கப்படுவர் என்றும் அறிவித்திருக்கிறார்கள். இது தனி மனித சுதந்திரத்திற்கும், அந்தரங்க உரிமைகளுக்கும் எதிரானது. சவுதி அரேபியாவில் பெண்ணியம் பேசுவது, நாத்திகம் பேசுவது, ஓரினச்சேர்க்கையில் ஈடுபடுவது போன்றவை தீவிரவாதத்திற்கு சமமான குற்றமாகக் கருதப்படும் என்று அந்நாட்டு அரசு அறிவித்துள்ளது.

கலவி என்பதை வெறும் உடல் பசிக்காக என்று மட்டும் நினைக்கக்கூடாது. இதில் ஈடுபடுவோரின் மன உணர்வுகள்



சமமாக்கப்படுகிறது. மூளையில் சுரக்கும் 'எண்டார்பின்' என்னும் ஹோர்மோன் மன மகிழ்ச்சியை ஏற்படுத்துகிறது. பெண்களுக்கு 'ஈஸ்ட்ரோஜன்' என்னும் ஹோர்மோன் அந்த சமயத்தில் அதிக அளவில் சுரந்து அவர்களுக்கு நன்மை அளிப்பதாகக் கண்டறியப்பட்டுள்ளது. சமீபத்தில் ஒலிம்பிக்கில் மூன்று தங்கப் பதக்கம் வென்ற ஒரு விளையாட்டு வீராங்கனை கலவி கொண்டு மகிழ்ந்ததன் காரணமாகவே நன்றாக விளையாடி இத்தனை பதக்கங்களை வென்றதாகக் கூறியுள்ளார்.

தன்பால் உறவால் பலவிதமான நோய்கள் தொற்றும் என்பவர்கள் ஆண், பெண் உறவிலும் அத்தகைய நோய்கள் வரும் என்பதை அறிந்துள்ளார்கள் தானே? ஒரு தனிப்பட்டவரின் காயங்களை ஆற்ற உதவாதவர்கள், அவர்களின் அந்தரங்க வாழ்க்கையை விமர்சிக்கத் தகுதியற்றவர்கள் என்று சொல்வார்கள். அப்படி உதவியவர்கள் கூட அதிகப்படியான உரிமை எடுத்துக் கொண்டு அந்தரங்கத்தை ஆராய்ச்சி செய்யக் கூடாது. அதுதான் நாகரீகம். ஒருவர் தானாக தனது அந்தரங்க பிரச்சினையை, குழப்பத்தை சொன்னாலொழிய அதைப்பற்றி




தேவையற்ற சிந்தனைகளை நமது மூளையில் ஏற்றிக் கொண்டு குழப்பிக் கொள்ளக் கூடாது.

கலாசாரம், பண்பாடு போன்றவை மனிதர்களால் உருவாக்கப்பட்டவை. அதனால் அது மாற்றங்களுக்கு உட்பட்டது. கஜுராஹோ போன்ற கோயில்களில் கூட தன்பாலுறவுச் சிற்பங்கள் வடிக்கப்பட்டுள்ளது. எனவே இது காலங்காலமாக இருந்துவரும் ஒரு வழக்கம் தான் என்பதை அறியலாம். மனித மனம் தனக்கு சாதகமானவற்றை மட்டுமே ஏற்றுக் கொள்ளும். பிறவற்றைப் புறந்தள்ளும்.

மனிதர்கள் இயற்கையிடமிருந்து கற்றுக் கொள்ள வேண்டிய பாடங்கள் ஏராளம். இயற்கையின் நோக்கில் எதுவும் ஆபாசமோ, அருவருப்போ, காட்டுமிராண்டித்தனமோ இல்லை. அதன் பன்முகத்தன்மையில் இதுவும் ஒன்று. இதைப் புரிந்து கொண்டாலே எதையும் எள்ளலாகப் பார்க்கும் போக்கு குறைந்து விடும். மேலை நாடுகளில் இருந்து தான் இந்த முறை பரவியிருக்கும் என்று பொத்தாம் பொதுவாகப் பேசுபவர்கள் ஒருமுறை நமது இந்தியப் புராணங்கள், இதிகாசங்கள் இவற்றைப் புரட்டிப் பார்ப்பது நல்லது.







இந்நாளிதழ் நல்லூர், இல - 68, Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி11.03.2025 இல் வெளியிடப்பெற்றது.